# Winmeen - Group 4 VAO General Tamil Model Test 10

1. "மென்சினை யாஅம் பொளிக்கும்"
   இதில் 'யா' என்பதன் பொருள்
   A) ஒரு வகை யானை B) ஒரு வகை மரம்
   C) ஒரு வகை குரங்கு D) ஒரு வகை மலர்
2. கீழ்க்கண்டவற்றுள் சு.சமுத்திரம் அவர்களின் சாகித்திய அகாதெமி விருது பெற்ற நாவல் எது?
   A) வாடாமல்லி B) குற்றம் பார்க்கில்
   C) மண்சுமை D) வேரில் பழுத்த பலா
3. "மலர்ப்பாதம்" இத்தொடர் குறித்த செய்திகளில் எது தவறானது?
   1. இத்தொடரில் மலருக்கு பாதம் உவமையாக கூறப்படுகிறது.
   2. பாதம் – உவமேயம்
   3. மலர் – உவமை
   4. போன்ற – உவமஉருபு
   A) அனைத்தும் சரி B) 1, 4 சரி
   C) 2, 4 சரி D) 2, 3, 4 சரி
4. "சாதி உணர்வு ஆதிக்க உணர்வை வளர்க்கிறது. மற்றவர்களின் உரிமைகளைப் பறிக்கிறது. மனிதர்களை இழிவுபடுத்துகிறது. அந்தச் சாதி என்ற கட்டமைப்பை உடைத்தெறிய வேண்டும்" என்று கூறியவர் யார்?
   A) அம்பேத்கர் B) பெரியார்
   B) பாரதியார் D) வள்ளலார்
5. "முண்டி மோதும் துணிவே இன்பம்
   உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி"
   - இவ்வரிகளை இயற்றியவர் யார்?
   A) நா.முத்துக்குமார் B) ந. பிச்சமூர்த்தி
   B) ஈரோடு தமிழன்பன் D) தாராபாரதி
6. "இயற்கையையும் வாழ்க்கை அனுபவங்களையும் இணைத்து, அறிவுத் தெளிவுடன் நல்வாழ்க்கைக்கான தத்துவ உண்மைகளைக் காணும் முயற்சிகளே பிச்சமூர்த்தியின் கவிதைகள்" என்று கூறியவர் யார்?
   A) வைரமுத்து B) கல்கி
   C) வல்லிக்கண்ணன் D) நா. முத்துக்குமார்
7. கீழ்க்கண்டவற்றுள் தவறானது தொடர் எது ?
   A) சங்க காலத்தில் ஆடவர் இடையில் ஓர் ஆடையும் , மேலே ஒரு துண்டும் அணிந்தனர்.
   B) ஆடவர் அணியும் மேற்சட்டை ' கஞ்சுகம் ' என அழைக்கப்பட்டது
   C) பெண்கள் புடவை அணிந்தனர் .
   D) துணி தைப்பவர் 'தையல்காரர்'என அழைக்கப்பட்டார் .
8. ஊர் ஊராகச் சென்று உப்பு வணிகம் செய்பவர்கள் ___ எனப்பட்டனர் .
   A) பாணர்கள் B) உமணர்கள்

C) தச்சர்கள் D) கொல்லர்கள்

9. பொருத்துக .

| | |
|---|---|
| 1. 2 ம் குலோத்துங்கன் | i) தாராசுரம் ஐராவதீசுவரர் கோவில் |
| 2. 2 ம் இராசராசன் | ii) தீரிபுவன வீரேசுவரம் கோயில் |
| 3. முதலாம் இராசேந்திரன் | iii) தஞ்சை பெரிய கோவில் |
| 4. முதலாம் இராசராசன் | iv) கங்கைகொண்ட சோழபுரம் . |

A) i ii iii iv
B) ii i iv iii
C) ii i iii iv
D) i ii iv iii

10. பொருத்துக .

| | |
|---|---|
| 1. பல்லவர்கள் | i) தாடிக்கொம்பு |
| 2. பாண்டியர்கள் | ii) தாராசுரம் |
| 3. சோழர்கள் | iii) பிள்ளையார்பட்டி |
| 4. நாயக்கர்கள் | iv) மாமல்லபுரம் |
| 5. சமணர்கள் | v) திருநாதர்குன்று |

A) iv iii ii i v
B) iii iv ii i v
C) iii iv i v ii
D) iv ii iii i v

11. சிந்து வகை பாடல்கள் ______,______ அமைந்த கண்ணிகளை கொண்டவை .

A) இலக்கணம், சந்தம் B) பாவகை, இலக்கணம்
C) சந்தம், இயைபுத் தொடை D) சந்தம், பாவகை

12. கீழ்க்கண்டவற்றுள் பண்பாகு பெயரை குறிக்கும் தொடர் எது ?

A) கார் அறுத்தான் B) மருக்கொழுந்து நட்டான்
C) மஞ்சள் பூசினாள் D) வற்றல் தின்றான்

13. சமண மதமும் புத்த மதமும் வளர்ந்த காலத்தில் கல்வி கற்ற பெண்ணாக திகழ்ந்தவர்

A) மாதவி B) கண்ணகி
C) மணிமேகலை D) காரைக்கால் அம்மையார்

14. சரியான பொருளை தேர்ந்தெடு

தவிர்க்க ஒணா, யாண்டும்

A) தவிர்த்தல், எங்கும் B) தவிர்த்தல் , எப்பொழுதும்
C) தவிர்க்க இயலாத , எங்கும் D) தவிர்க்க இயலாத , எப்பொழுதும்

15. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. IRCTC ன் இணையதளத்தில் பயணச்சீட்டை பதிவு செய்யவும் அதை நீக்கம் செய்யவும் வசதி உள்ளது .
2. இந்த வசதி 2002 ல் அறிமுகப்படுத்தப்பட்டது.
3. 12 ஆண்டுகள் கழித்து இந்த இணையதளத்தில் ஒரே நாளில் 13 இலட்சம் பயணச்சீட்டுகள் பதிவு செய்யப்பட்டது.
4. தற்போது இதில் ஒரு மணி நேரத்திற்கு 1500 பயணச்சீட்டுகள் பதிவு செய்யலாம் .

A) 2 , 3 சரியல்ல B) 2,4 சரியல்ல
C) 3, 4 சரியல்ல D) 2, 3, 4 சரியல்ல

16. " நெறிப்படுத்தினர் → நெறிப்படுத்து + இன் + அர் " இதில் ' இன் ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

A) நிகழ்கால இடைநிலை B) எதிர்கால இடைநிலை
C) இறந்த கால இடைநிலை D) எதிர்மறை இடைநிலை

17. சல்லிக்கட்டு என்னும் சொல்லில் ' சல்லி ' என்பது எதை குறிக்கும்

A) மாட்டின் திமில் B) கொம்பு
C) கழுத்தில் கட்டப்பட்டுள்ள வளையம் D) கழுத்தில் உள்ள மாலை

18. சரியான பொருளைத் தேர்ந்தெடு.

தாமம், கதலிகைக் கொடி

A) தாமதம், துணியாலான கொடி
B) போர், துணியாலான கொடி
C) மாலை, சிறு சிறு கொடியாக பல கொடிகள் கட்டியது
D) போர், சிறு சிறு கொடியாக பல கொடிகள் கட்டியது

19. குமிழித் தூம்பு என்னும் அமைப்பு யாருடைய காலத்தில் பயன்படுத்தப்பட்டது .

A) சேரர் காலம் B) பல்லவர்கள் காலம்
C) சோழர் காலம் D) நாயக்கர்கள் காலம்

20. " குமைந்தனை → குமை + த்(ந்) + த் + அன் + ஐ " இதில் 'ஐ' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம்

A) முன்னிலை பன்மை வினை முற்று விகுதி
B) முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதி
C) ஏவல் பன்மை வினைமுற்று விகுதி
D) ஏவல் ஒருமை வினைமுற்று விகுதி

21. திராவிட மொழிகளில் ______ஐ ஒட்டி பால்பாகுபாடு அமைந்துள்ளது.

A) பொருள்களின் எண்ணிக்கை B) பொருள்களின் உறுப்புகள்
C) பொருள்களின் நிறம் D) பொருள்களின் தன்மை

22. 1816ல் மொழி சார்ந்த ஆய்வுகளை மேற்கொண்டவர்கள் யார்?

A) பாப் , ரஸ்க், கிரிம் B) போப், ரஸ்க், கிரிம்
C) போப், ரஸ்க், ஜோன்ஸ் D) பாப், ரஸ்க், ஜோன்ஸ்

23. திராவிட என்ற சொல்லின் பிறப்பு முறையில் கீழ்க்கண்ட எந்த வரிசை சரியானது?

A) தமிழ் → தமிழா →தமிலா →ட்ரமிலா →டிரமிலா →த்ராவிடா →திராவிடா

B) தமிழ் →தமிலா → தமிழா →ட்ரமிலா →டிரமிலா →த்ராவிடா →திராவிடா

C) தமிழ் →தமிலா → தமிழா →டிரமிலா →ட்ரமிலா →த்ராவிடா →திராவிடா

D) தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா

24. சரியான இணையைத் தேர்ந்தெடு.

i.காழ்ப்புணர்ச்சி - ஈரொற்று மெய்ம்மயக்கம்

ii.மொத்தம் - உடனிலை மெய்ம்மயக்கம்

iii.வாழ்பவன் - வேற்று நிலை மெய்ம்மயக்கம்

iv.கப்பம் - ஈரொற்று மெய்ம்மயக்கம்

A) அனைத்தும் சரி B) i, iii, iv சரி

C) ii, iii, iv சரி D) i, ii , iii சரி

25. மயங்கொலி பிழைகளை திருத்துக

"வேலன் நூலகம் செண்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நிண்றான்."

A) வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கண்டு மகிழ்ந்து நின்றான்.

B) வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நின்றான்

C) வேலன் நூலகம் சென்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நிண்றான்

D) வேலன் நூலகம் செண்று வரிசையாய் அடுக்கி வைத்த புத்தகங்களைக் கன்டு மகிழ்ந்து நின்றான்

26. சரியான இணையை தேர்ந்தெடு

A) அமைச்சு இயல்-25 B) அரசு இயல்-32

C) ஒழிபியல் – 13 D) ஊழியல் -1

27. பொருத்துக.

1. மல மணிக்கர் i) வட கேரளம்
2. மலயன் ii) பாலக்காடு - கேரளம்
3. மலவேடா iii) இடுக்கி - கேரளா
4. மலேரு iv) தட்சிண கன்னடா – கர்நாடகம்

| | | | | |
|---|---|---|---|---|
| A) | i | ii | iii | iv |
| B) | ii | i | iii | iv |
| C) | i | iv | iii | ii |
| D) | iv | iii | ii | i |

28. அண்ணாமலையார் இயற்றிய காவடிச் சிந்து யாருடைய நூலின் தாக்கத்தால் விளைந்தது

A) அருணகிரியாரின் திருப்புகழ் B) திருமூலரின் திருமந்திரம்

C) அருணகிரியாரின் திருமந்திரம் D) திருமூலரின் திருப்புகழ்

29. கூற்றுகளை ஆராய்க.

1. மூலையின் கணம் எப்போதும் ஒரே எடையில் இருக்காது .
2. பிறந்ததில் ஆரம்பித்து இளமையில் மூன்று மடங்கு அதிகமாகிறது.
3. அதன் பின் ஆண்டுக்கு மூன்று கிராம் குறைகின்றது.

A) அனைத்தும் சரி B) 1, 2 தவறு

C) 1, 2 சரி C) 1, 3 சரி

30. "ஒப்ப மரங்கட்கு உயிர் உண்மை யாம்இனி
இப்படித் தோன்றும் இருதுக்கள் சார்ந்தென "
- இவ்வரிகள் இடம் பெற்றுள்ள நூல்

A) ஐங்குறுநூறு B) நீலகேசி
C) குண்டலகேசி D) மணிமேகலை

31. இலக்கணக்குறிப்புத் தருக .
அரும்பும் மலரும், வெப்பம் குளிர்

A) உம்மைத் தொகை, எண்ணும்மை B) எண்ணும்மை, உம்மைத் தொகை
C) எண்ணும்மை ,பண்புத்தொகை D) பண்புத்தொகை, எண்ணும்மை

32. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கான இலக்கணங்களை கூறும் நூல்கள்

1. நன்னூல் 2. திருக்குறள்
3. தொல்காப்பியம் 4. ஆத்திச்சூடி

அனைத்தும் (A B( 1, 2, 3 C (1 , 3 D) 1 , 4

33. சங்க காலத்தில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எத்தனை பிரிவினராக இருந்தனர்

A) 2 B) 3 C) 4 D) 5

34. தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்ட ஆண்டு

A) 1826 B)1910 C) 1854 D) 1857

35. ஆனந்தரங்கர் எங்கு எப்போது பிறந்தார்?

A) பாண்டிச்சேரி, 30. மார்ச்.1709 B) பெரம்பலூர் , 9. மார்ச்.1730
C) பெரம்பூர், 30. மார்ச்.1709 D) பெரம்பலூர், 30. மார்ச்.1709

36. ஆனந்தரங்கரின் எந்த தேதியிட்ட நாட் குறிப்பு பிரெஞ்சு ஆளுநர் டூமாஸ் நாணய அச்சடிப்பு உரிமையை பெற்றதை விளக்குகிறது.

A)10.09.1736 B) 09.10.1736
C) 03.06.1736 D) 10.09.1763

37. மதீனா நகரில் தானத்திலும் தவத்திலும் சிறந்து விளங்கிய மக்கள் தீன் நெறியை வளர்த்த பாங்கினைக் கூறும் காண்டம்

A) விவாதத்துக் காண்டம் B) நுபுவ்வத்துக் காண்டம்
C) ஹிஜிரத்துக் காண்டம் D) எதுவுமில்லை

38. கற்றளி என்னும் அமைப்பை வடிவமைத்தது யார் மற்றும் எக்காலத்தில் வடிவமைத்தார்?

A) இரண்டாம் மகேந்திரவர்மன் – 7ம் நூற்றாண்டு
B) இரண்டாம் நரசிம்மவர்மன் -7ம் நூற்றாண்டு
C) இரண்டாம் மகேந்திரவர்மன் – 9 ம் நூற்றாண்டு
D) இரண்டாம் நரசிம்மவர்மன் - 9ம் நூற்றாண்டு

39. முதலாம் இராசராச சோழன் தஞ்சைப் பெரிய கோவிலை எக்காலக்கட்டத்தில் கட்டினார்?

A) 1000 – 1010
B) 1003 – 1010
C) 1005 – 1012
D) 1005 – 1010

40. கவிதை என்ற கலை வடிவத்தின் அழகியல் ஊடாக மானுடத்தின் விழுமியங்களை உரத்த குரலில் கூறியவர்
A) மதுசூதனன்
B) பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரனார்
C) மீரா
D) பாரதியார்

41. எந்த இதழில் "காற்றில் கலந்த பேரோசை " என்னும் கட்டுரை 1963 இல் வெளிவந்தது ?
A) தமிழ் நிலம்
B) தென்றல்
C) தாமரை
D) முல்லை

42. இலக்கணக் குறிப்புத் தருக .
ஓதுக, பேசிடுக , ஆழ்க, வாழிய
A) பெயரெச்சங்கள்
B) வினையெச்சங்கள்
C) வியங்கோளை வினைமுற்றுகள்
D) வினைத்தொகைகள்

43. இலக்கணக் குறிப்புத் தருக .
பேரன்பு, தமிழ்கவிஞர்
A) வினைத்தொகை, வினையாலனையும் பெயர்
B) பண்புத்தொகை, வினையாலனையும் பெயர்
C) பண்புத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை
D) வினைத்தொகை, இருபெயரொட்டுப் பண்புத்தொகை

44. பகுபத உறுப்புகளாக பிரித்து எழுதுக – செய்வான்
A) செய்து + ஆன்
B) செய் + வான்
C) செய்+வ் + ஆன்
D) செய்து + வான்

45. சிலப்பதிகாரத்தின் எந்த காதையில் சித்தர்களை ' சித்தன்' என்ற சொல்லால் குறிப்பிடப்பட்டுள்ளது ?
A) வருந்தருக் காதை
B) ஊர் சூழ்வரிக் காதை
C) நாடுகாண் காதை
D) பவத்திரம்அருக என பாவைநோற்றக் காதை

46. தமிழ்ச் சித்தர்களின் பாடல்கள் எளிமையாக இருப்பினும் மறைபொருள் கூற்றுகளாக______ ஆகவே எழுதப்பட்டன.
A) மங்களம்
B) இடக்கரடக்கல்
C) குழுஉக்குறி
D) செய்யுள்

47. பொருத்துக
1. கரிமா i) அணுவை போல சிறுத்து நிற்கும் ஆற்றல்
2. லகிமா ii) வரையறையற்று விரிந்து படரும் ஆற்றல்
3. மகிமா iii) காற்றில் மிதக்கும் ஆற்றல்
4. அணிமா iv) எங்கும் வியாபித்திருக்கும் ஆற்றல்

A) i ii iii iv
B) ii i iv iii

C) iv iii ii i

D) iv ii iii i

48. தாகூரின் ' அமர் சோனார் பங்களா ' என்னும் பாடல் எந்த நாட்டின் நாட்டுப்பண்ணாக உள்ளது.

A) இந்தியா B) மியான்மர்

C) வங்காளம் D) இலங்கை

49. நாடகத் துறைக்கு தமிழில் நூல்கள் இல்லையே என்ற குறையினை தீர்க்க வந்த நூல் ______.

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை

B) மனோன்மணீயம் D) குண்டலகேசி

50. சரியான பொருளை தேர்ந்தெடு .

பூம்பராகம், ஆசு இலா

A) ஒரு வகை இசை, குற்றம் B) பூவில் உள்ள மகரந்தம், குற்றம் இலாத

C) பூவில் உள்ள மகரந்தம், குற்றம் D) போகவிட்டு, குற்றம் இலாத

51. ஏழ் பருவ மங்கையரைப் பற்றி கூறும் இலக்கியம் எது?

A) தூது B) உலா

C) பள்ளு D) அந்தாதி

52. சுரதா எழுதிய நூல்களுள் தமிழ் வளர்ச்சித்துறைப் பரிசைப் பெற்ற நூல்

A) சுரதாவின் கவிதைகள் B) துறைமுகம்

C) தேன்மழை D) சுவரும் சுண்ணாம்பும்

53. பொருந்தா இணையினைக் காண்க

A) பாட்டாளி மக்களது பசி தீர வேண்டும் - நாமக்கல் கவிஞர்

B) முல்லைக்கோர் காடு போலும் – சுரதா

C) கல்லைப் பிசைந்து கனியாக்கும் செந்தமிழ் - கவிமணி

D) எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் - பாரதியார்

54. கீழ்க்காண்பனவற்றுள் பொருத்தமற்றதைக் குறிப்பிடுக

A) கேணி, குளம், குட்டை, ஏரி, ஊருணி, பொய்கை, தடாகம்

B) செந்தமிழ், பைந்தமிழ், வண்டமிழ், முத்தமிழ், அமுதத்தமிழ்

C) ஞாலம், வையம், அவனி, உலகு, தரணி

D) கலம்பகம் , குறிஞ்சி, குறுநகை, தோற்றம்

55. நாட்டுப்புற இயலின் தந்தை என அழைக்கப்படுபவர் யார்?

A) ஜேக்கப் கிரீம் B) மாக்ஸ் முல்லர்

C) கி.வா.ஜகந்நாதன் D) ஆறு.அழகப்பன்

56. கீழே காணப்பெறும் கூற்றுகளில் பொருத்தமற்றவற்றைத் தெரிவு செய்க

1. திருவாரூர் விருத்தாசலனார் மகனார் கலியாணசுந்தரனார் என்பதன் சுருக்கம் திரு.வி.க. என்பது

2. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள 'தூள்ளம்' என்ற ஊரில் திரு.வி.க பிறந்தார். இவ்வூர் ‘தண்டலம்’ என அழைக்கப்படுகிறது.

3. மனித வாழ்க்கையும் இளங்கோ அடிகளும், முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, பொதுமை வேட்டல் ஆகிய நூல்களை திரு.வி.க இயற்றினார்.

4. தமிழ் நடையில் எளிமையைப் புகுத்திய இவர் தமிழ் தென்றல் என்று சிறப்பிக்கப்படுகிறார்.

A) 1,4 பொருத்தமற்றவை B) 2, 4 பொருத்தமற்றவை
C) 4, 3 பொருத்தமற்றவை D) 2, 3 பொருத்தமற்றவை

57. பொருத்தமற்றதைத் தேர்ந்தெடு
A) 'பொல்லாக்காட்சி' என்பதன் பொருள் 'மாயத்தோற்றம்'
B) வெகுளல் என்பதன் பொருள் 'சினத்தல்'
C) வெஃகல் என்பதன் பொருள் ' விரும்புதல்'
D) 'குறளை' என்பதன் பொருள் 'புறம் பேசுதல் '

58. உரிய சொல்லால் நிரப்புக.
அறனறிந்து மூத்த அறிவுடையார் _____
திறனறிந்து தேர்ந்து கொளல்
A) கேண்மை B) நன்மை
C) வன்மை D) தகைமை

59. தவறான மரபுச்சொல்லை தேர்க
A) மாம்பிஞ்சு - மாவடு
B) இளந் தேங்காய் -வழுக்கை
C) வாழைப் பிஞ்சு- வாழைக்கச்சல்
D) முருங்கைப் பிஞ்சு - முருங்கை மொட்டு

60. சொற்களை ஒழுங்குபடுத்திச் சொற்றொடராக்கி, சரியான தொடரைக் குறிப்பிடுக
A) படைமடம் பேகன் படான் கொடை மடம் படுதல் அல்லது
B) பேகன் கொடை மடம் படுதல் அல்லது படைமடம் படான்
C) பேகன் படைமடம் படுதல் அல்லது கொடை மடம் படான்
D) கொடைமடம் பேகன் படுதல் அல்லது படை மடம் படான்

61. பொருந்தா இணையைக் கண்டறிக
A) பரவை – கடல் B) கரி – நரி
C) பரி – குதிரை D) கணை – அம்பு

62. கீழ்க்காணும் கருத்துகளில் தவறானதைச் சுட்டிக் காட்டுக
A) பாரதிதாசன் திருக்குறளுக்கு உரை எழுதியவர்
B) பாரதிதாசன் சாகித்திய அகாடெமி பரிசு பெற்றவர்
C) பாரதிதாசன் பிரெஞ்சு மொழியில் புலமை பெற்றவர்
D) பாரதிதாசன் பெண்ணடிமைத்தனத்தைப் போற்றியவர்

63. பின்வருவனவற்றுள் மரக்கலத்தைக் குறிக்காத சொல் எது?
A) பஃறி B) திமில்
C) ஓடை D) வங்கம்

64. எழுத்தாளர் ஜெயகாந்தன் பெற்ற உயரிய விருது
A) பத்ம பூஷண் B) பத்மவிபூஷன்
C) ஞானபீட விருது D) பத்மஸ்ரீ

65. 'கொள்' என்ற வேர்ச்சொல்லின் வினைமுற்று
A) கொண்டான் B) கொள்க
C) கொண்ட D) கொண்டு

66. ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துக்களை எவ்வாறு பொருள் கொள்ள முடியும்?

A) முன்பு உள்ள வரிகளை வைத்து

B) பின்பு உள்ள வரிகள் மற்றும் நடுவில் உள்ள வரிகளை வைத்து

C) முன்னும் பின்னும் உள்ள வரிகளை வைத்து

D) முன்பு உள்ள வரிகள் மற்றும் நடுவில் உள்ள வரிகளை வைத்து

67. 'எவ்வழி நல்லவர் ஆடவர்; அவ்வழி நல்லை; வாழிய நிலனே'
- இவ்வரிகள் இடம்பெற்ற நூல் மற்றும் ஆசிரியர்

A) புறநானூறு – ஔவையார் B) அகநானூறு – ஔவையார்

C) நற்றிணை – கண்ணகனார் D) மூதுரை – ஔவையார்

68. தழையா வெப்பம் தழைக்கவும் – இதில் தழை என்பது எவ்வகைச் சொல்?

A) பெயர்ச்சொல் B) வினைச்சொல்

C) இடைச்சொல் D) உரிச்சொல்

69. " நீர் நிற்க, நான் இருக்க, இந்த சிறப்பு ஒன்று போதாதா?" யார் கூறியது?

A) அருணகிரிநாதர் B) பட்டினத்தடிகளார்

C) திருநாவுக்கரசர் D) மாணிக்கவாசகர்

70. ஹிட்லருக்கு எதிராக திறமையாக வாதாடி எழுத்து மூலம் ஹிட்லரை மன்னிப்பு கேட்கச் செய்தவர் யார்?

A) புலித்தேவன் B) செண்பகராமன்

C) மருதுபாண்டி D) வாஞ்சிநாதன்

71. தவறானதை தேர்ந்தெடு

A) நெடில் தொடர் குற்றியலுகரம் – ஆடு

B) வன்தொடர் குற்றியலுகரம் – சுக்கு

C) கேண்மியா செண்மியா – இடைத் தொடர் குற்றியலுகரம்

D) உயிர்த்தொடர் குற்றியலுகரம் – அழகு

72. “ ஊன் பெற்ற பகழியினால் அழிந்து வீழ்ந்தும்
உணர்வுடன்நின் திருநாமம் உரைக்கப் பெற்றேன்" – இதன் ஆசிரியர் யார்?

A) க.சச்சிதானந்தன் B) குமரகுருபரர்

C) வில்லிபுத்தூரார் D) முடியரசன்

73. கீழ்க்கண்ட கூற்றை ஆராய்க.

1. கலீலியோ கலீலி 1612ல் தொலைநோக்கியை அமைத்து விண்வெளி ஆய்வு செய்தார்.

2. கோபர்நிகசு அண்டத்தின் மையம் பூமியன்று சூரியனே என்று கூறினார்

3. கலீலியோ 1593ல் பதுவா பல்கலைக்கழகத்தில் கணக்கியல் விரிவுரையாளராகப் பணியாற்றினார்

4. கலீலியோ கல்லி 1564ல் பிப்ரவரி திங்கள் பதினைந்தாம் நாள் பிறந்தார்.

A) 2 , 4 சரி B) 1, 2 சரி

C) 1, 3 சரி D) 2, 3 சரி

74. பாவாணர் சொற்பிறப்பியல் அகரமுதலித்திட்ட இயக்குநராக பணியமர்த்தப்பட்ட ஆண்டு?

A) 8.5.1964 B) 5.8.1964

C) 5.8.1974 D) 8.5.1974

75. ஒரே நேரத்தில் உயரத்திலிருந்து எறியப்படும் பொருள்களுள் எடை மிகுந்த பொருள் விரைவாகவும் எடை குறைந்த பொருள் மெதுவாகவும் நிலத்தை வந்தடையும் எனக் கூறியவர் யார்?

A) கலீலியோ கலீலி B) அரிஸ்டாட்டில்

C) கோபர்நிகஸ் D) ஐசக் நியூட்டன்

winmeen.com

76. “இறந்தார் இறந்தார் அனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை"
- இது எவ்வகை பொருள்கோள்
A) அளைமறிபாப்புப் பொருள்கோள்
B) தாப்பிசைப் பொருள்கோள்
C) விற்பூட்டு பொருள்கோள்
D) நிரல்நிறைப் பொருள்கோள்

77. தவறான இணையைத் தேர்ந்தெடு
A) என்ப – பலர் பால் வினை முற்று
B) உள்ளதூஉம் – இன்னிசையளபெடை
C) அன்று - குறிப்பு வினைமுற்று
D) கண்ணோட்டம் – வினைமுற்று

78. காமராசர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆண்டு
A) 1935 B) 1937 C) 1939 D) 1954

79. தவறான இணையைத் தேர்ந்தெடு
A) செற்றம் - கறுவு
B) தாருகன் – அரக்கன்
C) இமையவர் – சிவன்
D) படரா – செல்லாத

80. " எளிய நடையில் தமிழ் நூல் எழுதிடவும் வேண்டும்
இலக்கண நூல் புதிதாக இயற்றுதலும் வேண்டும்”
என்ற வரிகளை பாடியவர்
A) பாரதியார்
B) பாரதிதாசன்
C) பிச்சமூர்த்தி
D) சுரதா

81. "அண்ணலும் விரும்பி என்பால் அழைத்திநீ அவனை என்றான்
பண்ணவன் வருக என்னப் பரிவினன் விரைவில் புக்கான்”
இவ்வரிகள் இடம்பெற்றுள்ள நூல்
A) சிலப்பதிகாரம்
B) மணிமேகலை
C) கம்பராமாயணம்
D) நளவெண்பா

82. "நிலைமொழியில் தனிக் குற்றெழுத்தின் முன் மெய் வந்து, வருமொழி முதலில் உயிர்வரின் முதலில் நிலைமொழி இறுதி மெய் இரட்டும் " என்ற விதியின் படி புணர்ந்து வரும் சொல்
A) பொருளனைத்தும்
B) எம்முயிர்
C) நாவையசைத்த
D) சேவழகு

83. "அறுகுளத் துகுத்து மகல்வயற் பொழிந்தும்
உறுமிடத்துதவா துவர்நில மூட்டியும்”
என்ற பாடலை இயற்றியவர் யார்?
A) ஔவையார்
B) கபிலர்
C) பரணர்
D) கம்பர்

84. "கைம்மாறு வேண்டாக் கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ உலகு"
என்ற குறள் இடம்பெற்றுள்ள அதிகாரம்
A) குறிப்பறிதல்
B) ஒப்புரவறிதல்
C) காலமறிதல்
D) வலியறிதல்

85. "கேளாய்நங் கிளை கிளைக்குங் கேடுபடரத் திறமருளிக்
கோளாய நீக்குபவன் கோளிலியெம் பெருமானே"
என பாடியவர் யார்?

A) திருஞானசம்பந்தர் B) திருநாவுக்கரசர்
C) சுந்தரர் D) மாணிக்கவாசகர்

86. கிள்ளை விடு தூதில் உள்ள கண்ணிகள் எத்தனை?
A) 269 B) 239 C) 293 D) 296

87. 'தமிழ்நாட்டில் தமிழ்ப் புலவன் ஒருவன் இல்லையெனும் வசை நீங்க ' வந்து தோன்றியவர் யார்?
A) உ.வே.சா B) பாரதிதாசன்
C) பாரதியார் D) சுரதா

88. "பெரும்பெருமா ளெவ் வேந்து முன்போதப் பின்பு
வரும் பெருமாள் வந்தனன் பாரீர்"
என்ற பாடலை இயற்றியவர் யார்?
A) ஔவையார் B) கபிலர்
C) பரணர் D) ஒட்டக்கூத்தர்

89. "செந்தமிழ்ச் செல்வத்திருக்குறளை நெஞ்சமே சிந்தனை செய்வாய் தினம்" என்று கூறியவர் யார்?
A) தேனிக்குடி கீரனார் B) கவிமணி
C) பரணர் D) கபிலர்

90. "அகழ்வாரைத் தாங்கும் நிலம் போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை"
இக்குறளில் பயின்று வரும் அணி
A) உவமையணி B) எடுத்துக்காட்டுவமையணி
C) பிறிதுமொழிதல் அணி D) பொருள் பின்வருநிலையணி

91. தவறான இணை எது?
A) escalator – மின்தூக்கி B) Emagazine – மின் இதழ்கள்
C) Compact disc – குறுந்தகடு D) intelligence - நுண்ணறிவு

92. வெற்றிமேல் வெற்றி பெற விருது வர பெருமை வர மேதைகள்
சொன்னது போல் விளங்க வேண்டும் என்று கூறியவர்?
A) கல்யாணசுந்தரம் B) மருதகாசி
C) காமராசர் D) தாராபாரதி

93. செயற்கரிய செய்வார் பெரியார் சிறியர்
செயற்கரிய செய்கலாதார் - இக்குறள் இடம்பெறும் அதிகாரம்
A) வான் சிறப்பு B) நீத்தார் பெருமை
C) அன்புடைமை D) இனியவை கூறல்

94. அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக்காட்ட பயன்படும் சுட்டெழுத்து அது?
A) உ B) ஆ C) ஐ D) ஒ

95. நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப்பகுதியைத் தொடுவதால் பிறக்கும் எழுத்து?
A) ண B) ன C) ந D) ள

96. கீழ்க்கண்டவர்களுள் மலேசியக் கவிஞர் யார்?
A) அ. முத்தரையனார் B) ராதாகிருஷ்ணன்
C) சக்திவேல் D) ராமகிருஷ்ணன்

97. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க

1. ஒன்று என்பதைக் குறிக்க ஓர், ஒரு ஆகிய இரண்டு சொற்களும் பயன்படுகின்றன.
2. உயிரெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஓர் என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்
3. உயிர் மெய்யெழுத்தில் தொடங்கும் சொல்லுக்கு முன் ஒரு என்னும் சொல்லைப் பயன்படுத்த வேண்டும்

A) அனைத்தும் சரி B) 1, 2 சரி
C) 1 மட்டும் சரி D) 2 , 3 சரி

98. உபபாண்டவம், கதாவிலாசம், தேசாந்திரி, கால் முளைத்த கதைகள் முதலிய நூல்களை எழுதியவர்

A) அ. முத்தரையனார் B) எஸ். ராதாகிருஷ்ணன்
C) சக்திவேல் D) எஸ். ராமகிருஷ்ணன்

99. "தீயவும் நல்லவும் செய்தவரை – விட்டுச்
செல்வது ஒருநாளும் இல்லை ஐயா"
என்ற வரிகளை இயற்றியவர்

A) கடுவெளி சித்தர் B) நாமக்கல் கவிஞர்
C) கவிமணி D) நையாண்டி பாரதி

100."வாடிய பயிரை கண்ட போதெல்லாம் வாடினேன் " என்று பாடியவர்

A) கம்பர் B) வள்ளலார்
C) இளங்கோவடிகள் D) ஔவையார்

winmeen.com

# Group 4 VAO General Tamil Model Test 10 – Answer Key

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| B | D | D | B | B | C | D | B | B | A |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| C | C | C | D | C | C | C | C | C | B |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| D | A | D | D | A | C | A | A | C | B |
| 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| B | C | B | B | C | A | C | B | B | A |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 |
| C | C | C | C | C | C | C | C | B | B |
| 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| B | C | D | D | C | D | D | A | D | B |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 |
| B | D | C | C | A | C | A | B | B | B |
| 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| C | C | A | D | B | B | D | B | C | B |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 |
| C | B | C | B | A | B | C | D | B | A |
| 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| A | A | B | A | C | A | A | B | C | B |

winmeen